Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No STC.NO. 1935/2024
DEPOSITION OF DEFENSE SIDE EVIDENCE No. 02 Page.No. 27/25

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. சான் பாஷா | | |
| தந்தை/கணவர் பெயர் | திரு. அப்புதுல் மாலிக் | தொழில் | மரமண்டி வியாபாரம் |
| கிராமம் | திருப்பத்தூர் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 53 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 )on the 20th day of February 2026.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

எ.சா. 02 திரு. சான் பாஷா **முதல் விசாரணை.-** (எதிரி ஆஜர்)

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். மரமண்டி வியாபாரம் செய்து வருகிறேன். புகார்தாரரரை எனக்கு தெரியும், ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். ஆஜர் எதிரி என் மரம்மண்டி கடைக்கு மேல் ஆர்டுவார் கடை வைத்துள்ளார். எதிரியின் கடைக்கு புகார் தாரர் அடிக்கடி வந்து செல்வதால் அவரை எனக்கு தெரியும். புகார்தாரரரும் எதிரியும் ஒன்றாக பிளைவுட் வியபாரம் செய்து வந்தார்கள். அவர்களுக்கு கேரளாவில் இருந்து அடிக்கடி லோடு வரும். அவர்கள் வியபாரம் செய்து கொண்டிருந்த போது சில நாட்கள் பொருட்களை ஏற்றி விடுமாறு என்னை கேட்பார்கள். நானும் ஏற்றிவிடுவேன். இருவரும் ஒன்றாக தொழில் செய்த சமயத்தில் என்னை சில நேரம் வங்கியில் பணம் செலுத்த சொல்வார்கள். மேலும், தொழில் நிமிர்தமாக என்னிடம் காசோலையையும் கொடுப்பார்கள். புகார்தாரர் மற்றும் எதிரி இருவருமே சில நேரங்களில் என்னை பொருட்கள் ஏற்றிவிட கேட்டுக்கொண்டுள்ளனர். புகார்தாரர் லோடு ஏற்றினால் அவரே கணக்கு வைத்துகொள்வார். அதே போல் எதிரி லோடு ஏற்றினால் அவரே கணக்கு வைத்துக்கொள்வார். நான் கூறிய விவரங்கள் அனைத்தும் 5 வருடங்களுக்கு முன்பு நடந்தன. அதன் பின்பு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. புகார்தாரர் அதன் பின்பு கடைக்கு வந்து செல்வதை நிறுத்திவிட்டார். அவர்களுக்குள் என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. புகார்தாரர்

கேரளாவிற்கு லோடுக்காக செல்லும் போது எதிரி சில நேரம் காசோலையும் சில நேரம் பணமும் கொடுத்து அனுப்புவார்.

**குறுக்கு விசாரணை**

இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் எதிரி தங்கையின் கணவர் என்றால் சரிதான். எதிரி கேட்டுக்கொண்டதின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் எதிரியின் மைத்துனர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு 2 நாட்களுக்கு முன்பு தான் தெரியும் என்றால் சரியல்ல, 1 மாதமாக தெரியும்.

Sd/-K.S.Dinesh.,B.A.,B.L.,(Hons)
Judicial Magistrate No.I,
Tirupattur.